**January 10, 2011**

The Chief Secretary to Government chaired a meeting on Provision of Urban Amenities in Rural Areas - PURA



இன்று (10.1.2011) சென்னை–புனித ஜார்ஜ் கோட்டையில், நகர்ப்பகுதிகளில் இருக்கின்ற அனைத்து வசதிகளும் கிராமப்புறங்களுக்கு எடுத்துச் செல்லும் (Provision of Urban Amenities in Rural Areas - PURA) 'புறா' திட்டம் கிராம வளர்ச்சி அமைச்சகத்தின் வாயிலாக கொண்டு செல்லப்படுகிறது. அதற்காக மாநில அரசின் ஒத்துழைப்பு கோரி இக்கூட்டம், தமிழக அரசின் தலைமைச் செயலர் திருமதி எஸ்.மாலதி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை செயலர் திரு க.அலாவுதீன், இ.ஆ.ப., மத்திய அரசின் PURA திட்ட கூடுதல் செயலர் திரு அரவிந்த் மயராம் உட்பட பல்வேறு அலுவலர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.